10/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 154 புதன்கிழமை ஒக்ரோபர் 25 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## விமலுக்கு மாரடைப்பு

கொழும்பு, ஒக்.25

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மாரடைப்பால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றையதினம் மகிந்த ராஜபக்சவின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய அரசமைப்பு தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்க சென்றிருந்தபோதே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. 06



## வெள்ளைக் கொடிப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.25

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போராட்டத்தில் ஒருவர் வெள்ளைக்கொடி ஏந்தி போராட்டம் நடத்தியுள்ளார். அரசியல் கைதியாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை பெற்ற கோமகனே வெள்ளைக்கொடிப் போராட்டம் மேற்கொண்டார். இது தொடர்பில் குறிப்பிட்ட அவர், யாழ்ப்பாணத்துக்கு கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதி வருகை தந்தபோது கறுப்புக்கொடி ஏந்தி போராடி இருந்தோம். அது தொடர்பில் உரையாற்றிய ஜனாதிபதி எனக்கு எதிராக கறுப்புக்கொடி உயர்த்தாதீர்கள் வெள்ளைகொடியை உயர்த்துங்கள். கறுப்புக்கொடியை உயர்த்தி என்னை பலவீனப் படுத்தினால், பேய்கள் பலம் பெற்று விடும் என உரையாற்றி இருந்தார். அதனால் அவர் கோரியது போல இன்று நான் வெள்ளைகொடி ஏந்தி போராடினேன் என்றார். (எ)




## அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக யாழில் கவனயீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.25

அரசியல் கைதிகளின் வழக்குகளை வவுனியாவுக்கு மாற்றுமாறு வலியுறுத்தியும், அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யுமாறு கோரியும், யாழ்.பேருந்து நிலைய முன்றலில் நேற்று காலை 10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. 'புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின்' ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (எ-04)

## மிருக பலியிடலுக்கு "முழுத்தடை" தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் மிருக பலியிடல் வழிபாட்டு முறையான வேள்விக்கு யாழ்.மேல் நீதிமன்றம் முற்றாகத் தடைவிதித்துள்ளது. ஆலயங்களில் மிருக பலியிடல் வழிபாட்டு முறைமைகளை தடைசெய்யக் கோரி இந்து மகா சபையினர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடாக யாழ்,மேல் மேல்நீதிமன்றில் நீதிப் பேராணை மனுத் தாக்கல் செய்தனர். அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் 06

## கண் சத்திர சிகிச்சை செய்த 9 பேருக்கு கிருமித் தொற்று

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 25

யாழ்ப்பாணத்தில் கண் சத்திர சிகிச்சை மேற்கொண்ட 9 பேருக்கு கண்ணில் கிருமி தொற்று ஏற்பட்டுள்ளது. பிரபல தனியார் மருத்துவமனை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை கண் 'கற்றாக்' குக்கு சத்திர சிகிச்சை செய்த 9 பேரே கிருமித் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் கூறுகையில்: 'பிரபல கண் வைத்திய நிபுணர் கடந்த சனிக்கிழமை எனக்கு சத்திர சிகிச்சை செய்தார். அன்றைய தினமே என்னை வீடு செல்ல அனுமதித்தனர். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்கு வரும்படி அறிவுறுத்தியிருந்தார்கள். அதன்படி மறுநாளும் சிகிச்சை பெற்று வீட்டுக்கு திரும்பினேன். அன்றிரவு நித்திரை கொண்டு மறுநாள் காலை எழுந்தபோது கண்ணில் வலி ஏற்பட்டது.

ஒப்ரேஷன் செய்தமையால் ஏற்பட்ட வலியாக இருக்கும் என 06

## தீர்மானங்கள் கிடப்பில் விசாரிக்க உத்தரவு

கொழும்பு, ஒக்.25

வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களை செயற்படுத்தாது கிடப்பில் போடப்பட்டமை குறித்து விசாரிக்கப்படும் என ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 5 உறுப்பினர்களை ஆளுநர் நியமித்திருந்தார். இந்தக் குழுவினர் சுமார் 150 பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டனர். இந்தத் தீர்வுகளை உரிய நிறுவனங்களுக்கு அவர்கள் அனுப்பி வைத்தபோதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் அசமந்தம் காட்டினர்.

அதிகாரிகளின் இந்த அசமந் 06

## அமைச்சரவை மாற்றியும் முன்னேற்றம் ஏதுமில்லை



யாழ்ப்பாணம், ஒக்.25

வடமாகாணசபையின் அமைச்சர் சபை மாற்றப்பட்டதன் பின்னரும் மாற்றங்கள் எதனையும் காணவில்லை என வடமாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார். முன்பு கொழுக்கட்டை சாப்பிட்ட நாங்கள் இப்போது மோதகம் சாப்பிடுகின்றோம், உள்ளடக்கத்தில் மாற்றம் இல்லை, உருவத்தில் மாற்றம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தஅவர், மாகாணசபையின் 06

## மாமியை வெட்டிக்கொன்ற மருமகனுக்கு 8 ஆண்டு சிறை



கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி பகுதியில் மாமியாரை வெட்டி படுகொலை செய்ததுடன் , மனைவியை வெட்டி காயப்படுத்திய குற்றத்துக்காக குடும்பத் தலைவருக்கு 8 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பகுதியில் கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி யோகராசா சிவகலா (வயது-42) எனும் பெண் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அவரது மகள் வெட்டுக் காயங் களுக்கு இலக்காகி வைத்திய சாலையில் சேர்க்கப் 06

## ஜனவரி 27இல் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, ஒக்.25

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் ஜனவரி 27ஆம் திகதி நடைபெறும் என அரச கரும மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரத்தில் வெளியாகும் என உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தப்பா தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த கலந்துரையாடலின்பின்னரே இருவரும் இக்கருத்தை வெளியிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
புதன் 25 ஒக்ரோபர் 2017

# தூக்கில் தொங்கிய நிலையில் கிளிநொச்சியில் சடலம் மீட்பு



கிளிநொச்சி, ஒக். 25

கிளிநொச்சி - பிரமனந்தனாறு குளப்பகுதியிலிருந்து நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்றுமுன்தினம் காணாமல் போயிருந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி - கண்ணகி நகர் பகுதியைச் சேர்ந்த 37 வயதான சந்திரலிங்கம் சந்திரகுமார் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக உறவினர்கள் தெரிவித்துள்ள நிலையில், பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)



# ஜப்பான் பிரதமருக்கு ரணில், மைத்திரி வாழ்த்து

கொழும்பு, ஒக். 25

ஜப்பானின் பிரதமராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஷின்சோ அபேக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும்,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானிய நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் மொத்தமுள்ள 465 இடங்களில், 300 இற்கும் மேற்பட்ட இடங்களில் பிரதமர் ஷின்சோ அபேயின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

இதுகுறித்து ருவிட்டரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்து பதிவு இட்டுள்ளார். அதேபோல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ருவிட்டரில் ஜப்பானியப் பிரதமருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளதுடன், ஜப்பான்- இலங்கை ஒத்துழைப்பை பலமாகக் கட்டியெழுப்புவதற்கு, எதிர்பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (உ)

# மாகாணசபை உறுப்பினர் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஒக். 25

திவுலபிடிய பகுதியில் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ரன்டீர் ரோத்ரிகோவின் வீட்டில் இருந்து, ரவைகள் மற்றும் குண்டு துளைக்காத கவச உடைகள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது பல்வேறு வகையான 115 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து, ரன்டீர் ரோத்ரிகோவின் மனைவியை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் திவுலப்பிட்டி பகுதியில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படும் குழுவொன்றுக்கும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். இதன்போது ரன்டீர் ரோத்ரிகோ உள்ளிட்ட ஏழ்வர் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. சந்தேகநபர்கள் நேற்று மினுவான்கொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். (உ)

# புலிகள் மறைத்த ஆயுதங்கள் புதுக்குடியிருப்பில் அகழ்வு



கொழும்பு, ஒக். 25

புதுக்குடியிருப்பில் இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளதாக சந்தேகிக்கப்படும் ஒரு பகுதியில் தற்பொழுது அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

புதுடியிருப்பு - அம்பலவன், பொக்கனைப் பகுதியிலேயே குறித்த அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2009ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையினர் பாரிய யுத்த ஆயுதங்களை குறித்த பகுதியில் புதைத்து வைத்துள்ளதாக சந்தேகம் வெளியாகியுள்ளது. அத்துடன், இந்தப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான பொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அகழ்வு பணி நடைபெறும் இடத்துக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி வருகை தந்துள்ளதைத் தொடர்ந்தே இந்த அகழ்வு பணி ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# அதிகாரிகள் அசமந்தம் ஆளுநர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

வடமாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகளின் அசமந்தப்போக்குத் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

வடமாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் அசமந்தப் போக்குக் காட்டுவதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தொடர்பில் நேற்று அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த செய்திக்குறிப்பில்,

கடந்த ஆவணி மாதம் புதிதாக நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பொதுச்சேவைகள் ஆணைக்குழு இற்றைவரையில் ஏறத்தாழ 150 பிரச்சினைகளுக்கான தீர்வினைக் கண்டறிந்துள்ளது. ஆயினும், இவற்றில் பல சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பதாகவும் அதிகாரிகள் தாமதம் காட்டி வருவதாகவும் பத்திரிகைச் செய்திகளிருந்து அறிய முடிகின்றது.

எனவே, இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் உரியவர்களை அழைத்து தகவல்களைத் திரட்டி தீர்மானங்கள் செயற்படுத்தப்படாது கிடப்பில் போடப்பட்டிருப்பது குறித்து விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளேன்" - என்றுள்ளது. (உ)

# வைத்தியர் சபையின் அவசரக் கூட்டம்

கொழும்பு, ஒக். 25

இலங்கை வைத்திய சபையின் அவசரக் கூட்டம் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

இதற்கமைய, இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வைத்திய சபையின் உறுப்பினர்களுக்கு குறித்த சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட, இலங்கை வைத்திய கல்விக்கான குறைந்த பட்ச தகுதி தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே, இலங்கை வைத்திய சபை, நாளைய அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. (உ)

# பாடசாலை மாணவிகளுக்கு தடுப்பூசி ஏற்றல் செயற்பாடு





கொழும்பு, ஒக். 25

கருப்பைக் கழுத்து புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி நேற்று யாழ். மாவட்டத்தில் முதன்முதலாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வழங்கப்பட்டது. இத் தடுப்பூசி நாடு பூராகவும் தரம் 6 இல் கல்விகற்கும் பாடசாலை மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் குறிப்பிட்ட யாழ். மாவட்ட தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி ஜி.ராஜீவ் இத் தடுப்பூசி ஏற்றல் செயற்பாடு யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் விரைவாக மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

புதன். 25 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com


# தமிழர் கோரிக்கையை வலுப்படுத்துமா ஐ.நா.?

இலங்கை தொடர்பாக ஐநாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்க் உதிர்த்திருக்கும் கருத்துக்கள் அவ்வளவு உவப்பானதாக இல்லை. இரு வார காலம் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்த அவர், பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசிய துடன், பல இடங்களுக்கும் நேரில் சென்று நிலைமைகளையும் அவதானித்திருந்தார்.

தனது பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய போது, ஊடகவியலாளர்களைச் சந்தித்து தனது கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவரின் உரையில் இலங்கை அரசின் மெத்தனப் போக்குக் குறித்து மட்டுமன்றி நீதி அரசியல், இனம் சார்புநிலைப்பட்டிருப்பது குறித்தும் கருத்து வெளியிட்டிருந்தார். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதை மறுக்கும் அரசாங்கம் போர் குற்றவாளிகளை காப்பதில் கொண்டுள்ள சிரத்தை குறித்தும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உத்தரவாதப்படுத்துவதற்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளரான பப்லோ டி கிரெய்க் உதிர்த்திருக்கும் இந்தக் கருத்துக்கள் குறித்து அரசாங்கம் நிச்சயம் மகிழ்ச்சி அடையப்போவதில்லை. ஆனால் மறுபுறத்தில் தன் மீதான கறை படிதலை துடைக்கத் தானேனும் ஏதும் செய்யும் என்றால் அது சாத்தியமில்லை – அப்படியே நடவடிக்கை ஏதும் எடுத்தாலும் அது ஒப்புக்காகத்தான் இருக்கும்.

இந்நிலையில் நீதித்துறை குறித்து சிறப்பு அறிக்கையாளர் கூறிய 'தேசிய இனம் சார்ந்து நீதி அரசியல் மயப்பட்டுள்ளது" என அவர் கூறியிருக்கும் கருத்து போர் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்கள் உள்நாட்டுப் பொறிமுறையிலேயே விசாரிக்கப்படும் என்ற அரசாங்கத்தின் கருத்துக்களுக்கு விழுந்த சாட்டை அடியே. இலங்கையின் நீதித் துறை குறித்து டி கிரெய்க் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் அவசியத்தை வலியுறுத்தும் தமிழர்களின் கருத்துக்கு வலுச் சேர்த்துள்ளது.

போர் முடிவுக்கு வந்தும் அனுமாரின் வால் போன்று நீளும் பிரச்சினைத் தீர்வு, போர் குற்றம், மனித உரிமைகள் மீறல் போன்றவற்றுக்கு சர்வதேசத்தின் மத்தியஸ்தம் – வெளிநாட்டு நீதிபதிகளின் வகிபங்கு அவசியம் என்ற தமிழரின் கோரிக்கையை ஐநாவும் சர்வதேசமும் வலியுறுத்த வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனமான தமிழருக்கு உண்மையான நீதி கிட்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

### ஏமாற்றியவரை அடித்தவர்களுக்கு

# 14 நாள் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக்.25

பணமோசடியில் ஈடுபட்டவரை நயப்புடைத்தவர்களை விளக்க மறியலில் தடுத்து வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்று உத்தர விட்டுள்ளது.

தென்னிலங்கையை சேர்ந்த குழு ஒன்று யாழில் உள்ளவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பெருமளவான பணத்தை மோசடி செய்து ஏமாற்றி இருந்தது. அந்நிலையில் குறித்த குழுவை சேர்ந்த ஒருவர் வியாழக் கிழமை இரவு மண்கும்பான் வெள்ளை கடற்கரை பகுதியில் தங்கி உள்ளதாக அறிந்த நாவாந்துறை மக்கள் அப்பகுதிக்கு சென்று குறித்த நபரை மடக்கி பிடித்துள்ளனர். பின்னர் குறித்த நபரை நாவாந்துறை பகுதிக்கு கொண்டு சென்று அங்கு வைத்து நயப்புடைத்த பின்னர் யாழ். பொலிஸாரிடம் குறித்த நபரை கையளித்தனர். அந்த நிலையில் , மக்களால் நயபுடைக்கப்பட்ட நபர் தன் மீது தாக்குதலை மேற்கொண்டார்கள் என ஆறு பேர் மீது யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த ஆறு சந்தேக நபர்களையும் கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினார்கள். அதனை தொடர்ந்து ஆறு சந்தேக நபர்களையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தர விட்டது.(உ)

# மகிந்தவுக்கு சவால்

கொழும்பு, ஒக்.25

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிற்கு, ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க சவால் விடுத்துள்ளார். புதிய அரசியல் சாசனம் தொடர்பில் விவாத மொன்றை நடாத்தத் தயார் என அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தங்காலையில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது அவர் இந்த சவாலை விடுத்துள்ளார். மேலும் புதிய அரசியல் சாசனம் நாட்டை பிளவடையச் செய்ய உள்ளதாகவும் அதற்கு ஜே.வி.பி ஆதரவளிப்பதாகவும் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தி வருவதாகவும் இந்த விடயம் குறித்த விமல் வீரவன்சவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஸவுடன் விவாதம் நடத்தத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். விமல் வீரவன்ச இது தொடர்பிலான விவாதமொன்றை நடாத்த விரும்பினால் கட்சியின் ஓர் உறுப்பினரை அனுப்பி வைக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மகளைத் துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது



மட்டக்களப்பு, ஒக்.25

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவன்கேணியில் 10 வயது மகளை, வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தந்தையை, ஏறாவூர் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். குறித்த சிறுமியின் தாய், கடந்த 10 நாட்களுக்கு முன்னர் மத்திய கிழக்கு நாடொன்றுக்குத் தொழிலுக்காகச் சென்றுள்ளார். குடும்பத்தின் மூத்த பிள்ளையான சிறுமி, தனது இரு சகோதரர்களுடன் தந்தையினதும் பாட்டியினதும் பராமரிப்பில் இருந்த வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை நண்பகல், தந்தையால், சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சிறுமியின் பாட்டியால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்தே குறித்த சிறுமியின் 32 வயதான தந்தையை ஏறாவூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ஊ)



# வயம்ப பல்கலைக்கு சவுதி 73 மில்லியன் நிதியுதவி

கொழும்பு, ஒக்.25

வயம்ப பல்கலைகழகத்தின் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்காக சவுதிஅரேபியா 73 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது. வயம்ப பல்கலைகழகத்தின் கல்வி வசதிகளை மேம்படுத்துவதற்கும் களுகங்கை அபிவிருத்தி ஆகிய இரண்டு திட்டங்களுக்கும் 73 மில்லியன் டொலர்களை நிவாரண அடிப்படையில் வழங்கியுள்ளது. இதற்கான இரண்டு உடன்படிக்கைகள் நிதி அமைச்சின் சார்பில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் அபிவிருத்திகான சவுதி நிதியத்தின் செயற்பாட்டு பணிப்பாளர் நாயகம் பௌஸி அல்ஷாட் ஆகியோர் கைச்சாத்திட்டனர். (உ)

## சிங்களவருக்கு சமமான உரிமை அனைவருக்கும்

இந்த நாட்டில் சிங்களவர் ஒருவர் அனுபவிக்கும் சகல உரிமைகளையும், சிங்களவர் அல்லாதவர்களுக்கு வழங்கத் தயார் எனவும் இந்த நாட்டை துண்டாட ஒருபோதும்இடமளிக்கப்போவதில்லை எனவும் கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். நாட்டை பிராந்தியங்களாக பிரித்துக் கூறு போட ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையெனக் குறிப்பிட்ட தேரர், பிரிபடாத இலங்கைக்குள் வரப்பிரசாதங்களை அனுபவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார். நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (உ)

# மைத்திரி மகளுக்கு நாமல் பாராட்டு

கொழும்பு, ஒக்.25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிக்கா சிறிசேன எழுதி வெளியிட்ட "ஜனாதிபதி தந்தை" புத்தகம் தன்னால் கொள்வனவு செய்யப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அந்த புத்தகத்தில் தான் அறிந்த மைத்திரிபால சிறிசேன குறித்தே உள்ளதாகவும், புத்தகத்திற்காக சிறந்த முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச குறித்து புத்தம் எழுதுவதற்கு எண்ணம் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் நாமலிடம் வினவியுள்ளார். தனக்கு புத்தகம் எழுதும் திறன் இல்லை என நாமல் குறிப்பிட்டுள்ளார். எனினும் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வாராந்தம் கடிதம் ஒன்று எழுதி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# சடலத்தை வைத்து உறவினர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.25

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரேட் வெஸ்டன்மலைத்தோட்ட மக்கள் நேற்று மதியம் சடலம் ஒன்றை வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். குறித்த மலைத்தோட்டத்தில் வசிக்கும் ஆர். லெட்சுமன் (வயது - 40) என்ற நபர் கடந்த 22ஆம் திகதி கிரேட்வெஸ்டன் பகுதியில் ரயில் பாதையில் சென்ற பொழுது கால் இடறி விழுந்துள்ளார். உடனடியாக இவரை பொதுமக்கள் தோட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு வைத்திய அதிகாரி உரிய நேரத்தில் வருகை தந்து சிகிச்சையை மேற்கொள்ளாததால் அவர் உயிரிழந்துள்ளார். அதேவேளை தோட்டத்தில் அம்புலன்ஸ் இருந்தும் மேலதிக சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைக்கேனும் கொண்டு செல்லப்படவில்லை எனத் தெரிவித்தே தோட்ட நிர்வாகத்தை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (உ)



## இன்று நாளும் கோளும்

25.10.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 08 ஆம் நாள்

சதுர்த்தி காலை 06.18 வரை | கேட்டை மாலை 05.35 மணி வரை | மரணயோகம்

இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் 10.45 - 11.45 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | ஆதாயம் | வரவு | தடங்கல் | நன்மை | சுகம் | பெருமை | விவேகம் | கீர்த்தி | உழைப்பு | உதவி | அலைச்சல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேயிலை மலையை பராமரிக்க வலியுறுத்தி

# போராட்டம்

கொழும்பு, ஒக். 25

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டிரதன் செம்புவத்தை தோட்ட தேயிலை மலையை முறையாகப் பராமரிக்குமாறு தோட்ட நிர்வாகத்திடம் கோரி, அத்தோட்டத் தொழிலாளர்கள் நேற்று தோட்ட காரியாலயத்திற்கு முன்பு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். வட்டவளை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஸ்டிரதன் செம்புவத்தை தேயிலை மலை சில வருட காலமாகப் பராமரிக்காமல் காடாக காணப்படுகின்றதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை தேயிலை செடிகளில் விஷப் பூச்சிகள், பாம்புகள் காணப்படுவதால் இத்தோட்டத் தொழிலாளர்கள் ஒவ்வொரு நாளும் தொழிலுக்குச் செல்ல முடியாத அச்சத்தில் உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் நலன் கருதியும் தேயிலை செடியின்பாராமரிப்பை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர். (உ)

## ஐ.நா. ஆரம்பித்து 72 வருடங்கள்

கொழும்பு, ஒக். 25

ஐக்கிய நாடுகள் சபை உத்தியோகபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டு நேற்றுடன் 72 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இந்த சர்வதேச அமைப்பிற்கு ஐக்கிய நாடுகள் என்ற பெயரை அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பிராங்லின் ரூஸ்வெல்ட் சூட்டியிருந்தார். சபையின் முதலாவது கூட்டம் 1945ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி இடம்பெற்றது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 24ஆம் திகதி ஐக்கிய நாடுகள் தினமாக கொண்டாடப்படுவது வழக்கம்.

பிரிட்டன் ராஜதந்திரி க்ளெட்வின் ஜேப் முதலாவது ஐநா செயலாளராக நியமிக்கப்பட்டார். அன்று முதல் இன்று வரை பத்துப் பேர் அந்தப் பதவியை வகித்துள்ளார்கள். போர்த்துக்கல்லைச் சேர்ந்த அந்தோனியோ குத்தரெஸ் சமகால செயலாளர் நாயகமாவார்.

1955ஆம் ஆண்டு டிசெம்பர் 14ஆம் திகதி இலங்கை ஐநா அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டது. (உ)

## 2 இலட்சம் மெற்றிக் டொன் அரிசி இறக்குமதி



கொழும்பு, ஒக். 25

வெளிநாடுகளிலிருந்து 2 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை உடனடியாக இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக சர்வதேச ரீதியாகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாக்கிஸ்தான், மியன்மார், கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து, மற்றும் பங்களாதேஷ் நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கூறினார். நாட்டரிசி 90 ஆயிரம் மெட்ரிக்தொன், சம்பா அரிசி 60 ஆயிரம் மெட்ரிக் தொன், வெள்ளைப் பச்சையரிசி 50 மெட்ரிக் தொன் ஆகியவற்றை இறக்குமதி செய்யக் கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளன. முதல் தொகை அரிசி ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி இறக்குமதி செய்யப்படும். எஞ்சிய ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி டிசம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.(உ)

## திருமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை



கொழும்பு, ஒக். 25

கொழும்புத் துறைமுகம், ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் ஆகியவற்றுக்கு அப்பால் திருகோணமலைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய பிரதமர் இதுதொடர்பாகத் தெரிவிக்கையில்,

அபிவிருத்திப் பணிகளுக்காக சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகள் உதவி செய்வதாகப் பிரதமர் குறிப்பிட்டார். அடுத்த பத்து வருடங்களில் வங்காள விரிகுடா கரையோர நாடுகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அதன் மூலம் திருகோணமலைத் துறைமுகமும் அபிவிருத்தியடையும் இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரும் பங்களிப்பு இடம்பெறும் என்றும் பிரதமர் ரணில் விகிரமசிங்க தெரிவித்தார். (உ)

## விகாரைகள் புனரமைக்க மறுமலர்ச்சி நிதியம்



கொழும்பு, ஒக். 25

இலங்கையின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள விகாரைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கென ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் ஆலோசனையின்பேரில் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் பௌத்த மறுமலர்ச்சி நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கென நன்கொடைகளைக்கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது மகாசங்கத்தினர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நன்கொடைகள் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வசதிகுறைந்த பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்காக இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். (உ)

## வறுமை வீதம் வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 25

இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை 4 சதவீதம் வரை குறைந்திருப்பதாக தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தனிநபர் சராசரி வருமானம், வரவு-செலவு ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை ஆராய்ந்தபோது இந்த விடயம் தெரியவந்ததாகத் திணைக்களம் அறிவித்துள்ளது. முழுத் தேசத்தையும் உள்ளடக்கும் வகையில் 25 ஆயிரம் இல்லக்கூறுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

2016ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டது. கடந்த தசாப்தத்தில் தேசிய மட்டத்தில் வறுமையின் போக்குக் குறைவடைந்த போதிலும், மாகாண, மாவட்ட, நகர்ப்புற, கிராமப் புற மட்டங்களில் வேறுபாடுகள் இருப்பதை ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (உ)



## அவன் வாழ்க்கையும், அவன் வந்தவாறே...

நேற்றைக்குக் காலைமையே தலை குழம்பிப் போச்சு. வழக்கமா பேக்கறி வான்தான் பாட்டோடை எங்களை எழுப்பும். நேற்றைக்குப் பாத்து என்ரை வீட்டுக்குக் கிழக்காலை இருக்கிற கந்தையன் வீட்டடியிலை ஒரே அமர்க்களம். எழும்பின கையோடை வீச்சாப் போனன். கந்தையன்ரை பெடி கையிலை கத்தியோடை நிண்டு சன்னதம் ஆடிக் கொண்டு நிக்கிறான். பக்கத்து வீட்டுச் சுப்புறுவோடை ஏதோ தகராறாம். இத்தனைக்கும் சுப்புறு அவன்ரை தாய் மாமன்.

கந்தையன்ரை வீட்டுக்காரார் அவனை இழுக்க... அவன் பிடிங்கிக் கொண்டு ஓட... பிறகு இழுக்க.... அவன் ஓட... இப்பிடி மாறி, மாறி அவன் சீன் காட்டிக் கொண்டு நிண்டான். இதுக்கிடையிலை கந்தையன்ரை பெண்சாதி கேற்றுக்குக் குறுக்கை விழுந்து ஒப்பாரி வேறை...

என்னடா செய்யிறதெண்டிட்டு ஒரு மாதிரி உள்ளிட்டு அவனை அதட்டிப் அவன்ரை கையிலை இருந்த கத்தியைப் பிடிங்கிப் போட்டன். அவன் என்ரை சொல்லைக் கொஞ்சம் கேப்பன். ஏனெண்டால் அவனுக்குப் படிக்கிற காலத்திலை கொப்பி பென்சில் வேண்ட எண்டு வருவன். அப்பப்ப ஏதேன் கையிலை குடுப்பன். அதாலை ஆள் எனக்கு மடக்கம்.

இதையெல்லாம் ஒரு மாதிரிச் சடைஞ்சு போட்டு சாக்குக் கட்டிலிலை படுத்துக் கிடந்தன். மனங் கேக்கேல்லை. இற்றை வரை ஒரு சண்டை சச்சரவெண்டு போகாத பெடி ஏன் இப்பிடிக் கத்தியை எடுத்துக் கொண்டு சன்னதமாடினவன்? பிழை எங்கையோ கிடக்கெண்டு மனங்சொல்லிச்சுது.

மெல்ல எழும்பி சைக்கிளை எடுத்துக் கொண்டு கோயில் பக்கம் போனன். முன் குந்திலை எங்கடை நடராசா வாத்தியார் பேப்பர் வாசிச்சிக் கொண்டு இருந்தார். போய் அவருக்குப் பக்கத்திலை இருந்து செருமினன். ' விநாசி! பாத்தியே பேப்பரை" எண்டு பேப்பரைக் காட்டினார். 'மீண்டும் வாள் வெட்டு" பேப்பர் தலைப்பே பிழையாக் கிடக்கு எண்டன்.

'பிழைதான். அது அவங்கடை பிழை இல்லை. எங்கடை பிழை. எங்கடை சமுதாயத்தின்ரை பிழை. பொறுப்பிலை இருக்கிற எங்கடை ஆக்களின்ரை பிழை. அதிகாரிகளின்ரை பிழை. அரசியல்வாதியளின்ரை பிழை. அரசாங்கத்தின்ரை பிழை." எண்டு நீளமா ஒரு பிரசங்கம். என்ரை தலை விறைச்சுப் போச்சு. அவருக்குக் காலைமை நடந்த கந்தையான்ரை பெடியின்ரை கதையையும் சொன்னன்.

'சரி கந்தையான்ரை பெடிக்கு என்ன வயசு?" எண்டு வாத்தியார் கேட்டார். 'இருபத்தைஞ்சுக்கைதான் இருக்கும்" எண்டன்.

'அப்ப அவன் எப்ப பிறந்திருப்பன்? 93-95 இலை என்ன? அப்ப எங்கடை ஊரிலை என்ன நடந்தது? போர் என்ன? அப்ப அவன் பிறந்த உடனை கண்டதெல்லாம் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், துவக்குச் சூடு, இடப்பெயர்வு, பசி, பட்டினி எண்டு இதைத் தானே கண்டு வளர்ந்தவன்? அப்ப அவன் மன நிலை சந்தோக்ஷமாவே இருந்திருக்கும். பயத்தோடையும், மனப் பாதிப்போடையும்தானே வளர்ந்திருப்பன். அவன்ரை மனதை ஆத்த நாங்கள் என்ன செய்தம்? இருத்தி நல்லதைச் சொல்லிக் குடுத்தனாங்களே? ரிப்பி ரிப்பியும், பபுள் கம்மும், சூட்டியும், பல்சரும் அவன்ரை மனதை ஆத்துமே? அப்ப ஆரிலை பிழை?"

மனுசன் சொல்லச் சொல்ல எனக்கு விசராக்கிப் போட்டிட்டுது. மெல்ல எழும்பி வந்திட்டன்.

- வில்லங்க விநாசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமல் மீது நடவடிக்கை



## சட்டமா அதிபரிடம் ஆலோசனை

கொழும்பு, ஒக். 25

அரச வாகனங்களை துஷ்பிரயோகமாகப் பயன்படுத்தி, ரூபா 91 மில்லியன் நஷ்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள, இரண்டு சந்தேக நபர்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கை தொடர்பில், நிதி மோசடி விசாரணைப்பிரிவு, சட்டமா அதிபரிடம் மேலதிக ஆலோசனையை கோரியுள்ளது.

அரசாங்கத்துக்கு 91 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படும் வகையில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 40 வாகனங்களை துஷ்பிரயோகம் செய்ததாக வீடமைப்பு, நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட இரண்டு சந்தேக நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

மேற்படி வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குறித்த இரண்டு சந்தேக நபர்கள் சம்பந்தமாக, நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டியுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது. (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



### 25.10.2001

இந்தியாவில் தடா சட்டத்துக்குப் பதிலாக POTO என்ற புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்தது. இந்தச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 23 தீவிரவாத அமைப்புகளுக்கு ஒன்றிய அரசு தடை விதித்தது.

# மைத்திரி இன்று கட்டார் பயணம்



கொழும்பு, ஒக். 25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று கட்டாருக்கு இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் பல்வேறு உடன்பாடுகள் கையெழுத்திடப்படவுள்ளன. பிரதான எரிவாயு மற்றும் எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றான கட்டார், இலங்கையின் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வுக்கு உதவிகளை வழங்குவதில் ஆர்வம் கொண்டுள்ளது. இதற்கமைய சக்தி ஒத்துழைப்பு தொடர்பான உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்படவுள்ளது. இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சுக்களுக்கு இடையிலும், இராஜதந்திர பயிற்சி மற்றும் ஆய்வு தொடர்பான ஒத்துழைப்புக்கான உடன்பாடும் ஒன்றும் கையெழுத்திடப்படவுள்ளது. (உ)



## இலத்திரனியல் ரயில் சேவை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 25

இலத்திரனியல் ரெயில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. முதல் கட்டமாகப் பாணந்துறையிலிருந்து வெயங்கொடை வரையில் குறித்த இலத்திரனியல் ரயில் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான முதலீடு 600 மில்லியன் ரூபாவாகும். உலக வங்கியின் உதவியுடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (உ)

## சூரியவெல விளையாட்டரங்கு புனரமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 25

சூரியவெவ சர்வதேச விளையாட்டு மைதானம் நவீனமயப்படுத்தப்படவுள்ளது. மைதானத்தை நவீனமயப்படுத்துவதற்கு இலங்கைக் கிரிக்கெட் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இரண்டு கோடி 50 இலட்சம் ரூபா இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீண்டகாலமாக கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படாமலும் முறையான பராமரிப்பும் இல்லாத தன் காரணமாக அழிந்துவரும் மற்றும் காட்டு யானைகளிடமிருந்து கிரிக்கெட் மைதானத்தை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த வேலியும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வாகன விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஒக். 25

ஆராச்சிக்கட்டு பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். லொரியுடன் மோட்டார் சைக்கிளில் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது, படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அவரை தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இந்தநிலையில், 35 வயதான குறித்த நபர் பலியாகியுள்ளார். சம்பவம் தொடர்பில் லொரி சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். இது குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (உ)

## உக்குலான்குளத்தில் சிலை உடைப்பு



வவுனியா, ஒக். 25

வவுனியா - உக்குலான்குளம் பகுதியிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்தின் சிலை ஒன்று சேதப்படுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சிலை இருந்த கூட்டுக்கு தீ வைத்துள்ள விஷமிகள் சிலர், அங்கிருந்த சிலையையும் சேதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் சில குழுக்களை அனுப்பி விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக, வவுனியா பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

## நீதிமன்றம் அழைப்பாணை



கொழும்பு, ஒக். 25

சட்டவிரோதமாக யானைக் குட்டி வைத்திருந்த குற்றச்சாட்டில் உடுவே தம்மாலோக தேரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முதல் சாட்சியாளரான, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்கவுக்கு, நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கின் சாட்சி விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்படவிருந்தது.

எனினும் வசந்த சேனாநாயக்க நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. இந்தநிலையில், இராஜாங்க அமைச்சர் அத்தியவசியக் கடமை காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது போனதாக, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரியப்படுத்தினார். இதன்படி, அவரை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்குமாறு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். வழக்கின் அடுத்த கட்ட சாட்சி விசாரணைகள் நவம்பர் 27ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ)

# கச்சதீவு அருகே தமிழக மீனவர்கள்மீது தாக்குதல்

இராமேஸ்வரம், ஒக்.24

கச்சதீவருகே மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களின் படகுகள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியதாக தமிழகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் 300க்கும் மேற்பட்ட விசைப்படகில் 1200 க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்கக் கடலுக்கு சென்று கச்சத்தீவு அருகே மீன் பிடித்து கொண்டிருந்தனர். அதன் போது அங்கு ரோந்து படகில் வந்த இலங்கை கடற்படையினர் 10க்கும் மேற்பட்ட விசைபடகுகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் விரட்டியடித்ததோடு கற்கள் மற்றும் போத்தல்கள் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதன்போது தமது படகில் அத்துமீறி ஏறிய இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை தாக்கியதோடு தாங்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை அள்ளிசென்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். தினமும் இவ்வாறானதொரு அச்ச நிலையுடனேயே மீன்பிடியில் ஈடுபடுவதாக் குறிப்பிட்டுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் இவ்விடயத்தில் இந்திய மத்திய மாநில அரசுகள் தலையிட்டு மீனவர்கள் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வு காணவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (உ)

## காணாமல்போனோர் பணியகத்துக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஒக். 25

காணாமல் போனோர் பணியகத்துக்கான உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கு, அரசியலமைப்புப் பேரவையினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதியின் கையெழுத்துடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. எனினும், காணாமல் போனோர் பணியகத்தின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இழுபறி நிலை நீடித்து வந்தது.

இதுகுறித்துக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், அரசியலமைப்புப் பேரவை மும்மொழி நாளிதழ்களிலும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அரசியலமைப்புப் பேரவையின் பதில் செயலாளர் நாயகத்தினால் செய்யப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு அமைய, நவம்பர் 6ஆம் நாளுக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (உ)

# காடுகளை அழித்தால் கடும் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 25

காடுகளை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டின் வனப் பரம்பலைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கம் விசேட அவதானத்துடன் செயற்படுவதுடன், அதற்கான அனைத்து செயற்பாடுகளும் தாமதமின்றி நிறைவேற்றப்படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஆசிய பசுபிக்வலய நாடுகளின்வனப் பாதுகாப்பு ஆணைக்குழுவின் 27 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிபா சிறந்த வீரர் விருது: ரொனால்டோ சாதனை



“பிபா” சிறந்த வீரருக்கான விருதை ஐந்தாவது தடவையாகவும் கிறிஸ்ரியானோ ரொனால்டோ வென்று சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் பிபாவின் சிறந்த வீரருக்கான விருதை அதிகம் வென்றவர் என்ற மெஸ்ஸியின் சாதனையை சமன் செய்துள்ளார்.

உதைபந்தாட்ட உலகில் சிறந்த வீரர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வை வருடம்தோறும் “பிரெஞ் புட்போல்” பத்திரிகையுடன் இணைந்து பிபா நடத்தி வந்தது. ஒப்பந்த அடிப்படையில் நடந்த இந்த விருது வழங்கல் கடந்த வருடத்துடன் முடிவுக்கு வந்தது. இதையடுத்து இரு அமைப்புகளும் தனித்தனியாக விருதுகளை வழங்கி வருகின்றன. பிபா தனித்து வழங்கிய இந்த விருதை ரொனால்டோ முதல் தடவையாக கைப்பற்றியுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட ரொனால்டோ ‘லா லிகா, சம்பியன்ஸ் லீக் தொடர்களில் ரியல் மட்ரிட் அணிக்காக 7 ஆம் இலக்கத்துடன் களம் இறங்குகிறேன். அது எனக்கு ராசியானது. எனவே 7 முறை இந்த விருதைப் பெற முயற்சிப்பேன். எனக்காக வாக்களித்த அனைவருக்கும் நன்றி” என்றார். விருதுக்கான வாக்களிப்பில் 43.16 வீத வாக்குகளை ரொனால்டோவும், 19.25 வீத வாக்குகளை மெஸ்ஸியும் 6.97 வீத வாக்குகளை நெய்மரும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் தலைமையில் மாற்றம்

பாகிஸ்தானுக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் தோல்வியுற்று வொயிட் வாஷ் ஆகியிருக்கிறது இலங்கை அணி. இந்த ஆண்டில் மட்டும் இதுவரை அணியின் தலைமையை ஏழுமுறை மாற்றியுள்ளது இலங்கை.

ரங்கன ஹேரத், தினேஷ் சண்டிமால், சமரா கபுகெதரா, லதிஷ் மலிங்கா, ஏஞ்சலோ மேத்யூஸ் மற்றும் உபுல் தரங்கா ஆகியோரை அடுத்து தற்போது திசர பெரேரா அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆண்டில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளிடம் மோசமாக தோல்வி அடைந்து தொடரையும் இழந்துள்ள இலங்கை அணிக்கு ஒரே ஆறுதல் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றது மட்டுமே. இந்நிலையில் திசர பெரேரா தலைமையில் பாகிஸ்தானுக்கு எதிரான ரீ 20 தொடரில் விளையாட உள்ள இலங்கை, அதனையடுத்து இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. அங்கு மூன்று டெஸ்ட், மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று டி20 போட்டிகள்கொண்ட தொடரில் விளையாடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சென்னை அணியில் மீண்டும் டோனி?

ஐ.பி.எல்லில் சூதாட்ட சர்ச்சையில் இரு ஆண்டு தடை விலகிய நிலையில் அடுத்த ஆண்டு சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மீண்டும் களமிறங்கவுள்ளன.

இந்த அணிக்காக விளையாடிய வீரர்கள் கடந்த இரு சீசனிலும் ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட்ஸ், குஜராத் லயன்ஸ் அணிகளுக்காக களமிறங்கினார்கள். இந்நிலையில் ஐ.பி.எல். ஆட்சிமன்றக்குழு ஒரு புதிய திட்டத்தை முன்மொழிந்துள்ளது.

இந்த திட்டமானது, அடுத்த மாதம் நடைபெற உள்ள ஐ.பி.எல் அணிகள் உரிமையாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் ஏற்கப்படுமானால் மகேந்திர சிங் டோனி, மீண்டும் சி.எஸ்.கே. அணிக்காக விளையாடக்கூடும். ஐபிஎல் ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் ஒருவர் கூறும்போது, “குறைந்தபட்சம் 3 வீரர்களை தக்க வைத்துக்கொள்ளலாம் என நாங்கள் முன்மொழிய உள்ளோம். இதில் இரு வெளிநாட்டு வீரர்களும், ஒரு இந்திய வீரரும் அடங்குவார்.

இதனால் கடந்த இரு ஆண்டுகளாக புனே, குஜராத் அணிக்காக விளையாடிய வீரர்களை சி.எஸ்.கே, ராஜஸ்தான் அணிகள் தக்க வைத்துக்கொள்ள முடியும். இந்த திட்டத்தை அடுத்த மாதம் நடைபெறும் ஐ.பி.எல் அணி உரிமையாளர்கள் பயிற்சி பட்டறையில் முன்வைக்க உள்ளோம்” என்றார்.

## முல்லை. அரச அதிபர் கிண்ணம்

# கரப்பந்தாட்டப் போட்டியில் மாந்தை கிழக்குச் சம்பியன்





முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட போட்டியில் மாந்தை கிழக்கு பிரதேசசெயலகம் வெற்றிபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட திணைக்களங்களுக்கு இடையிலான அரசாங்க அதிபர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கரப்பந்தாட்ட போட்டிகளில் 13 திணைக்களங்கள் பங்குகொண்டன. இதன் இறுதி ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் மாந்தைகிழக்கு பிரதேச செயலக அணியும் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியும் மோதிக்கொண்டன. இதில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

## தொடர்ச்சிகள்

### அமைச்சரவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்காக துறைசார் நிபுணர்களை கொண்டு புதிய நியதிச்சட்டங்கள், கொள்கைகள் போன்றவற்றை உருவாக்கி கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)

### மிருக பலியிட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் கடந்த 2016 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 01 திகதி முதல் நடைபெற்று வந்தது. அன்றைய தினம் முதல் இதுவரை கால பகுதியில் மிருக பலியிடல் வழிபாட்டு முறையான வேள்விக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ,

“யாழ்.மேல் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட இந்து ஆலயங்களில் பூஜைகளின் போதோ வேறு சந்தர்ப்பங்களிலோ மிருகங்களை பலியிடக் கூடாது என தடை விதிக்கப்படுகின்றது. அதற்கு எந்த உள்ளூராட்சி சபைகளும் , நீதவான் நீதிமன்றங்களும் அனுமதி வழங்க கூடாது. அதனையும் மீறி எவரேனும் மிருக பலியிடலை மேற்கொண்டால் அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய முடியும். முறைப்பாட்டின் பிரகாரம் உடனடியாக குற்றமிழைத்தவர் கைது செய்யப்பட்டு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட வேண்டும்” என

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (எ-01)

### மாமியை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு சிகிச்சையின் பின்னர் உயிர் தப்பினார்.

குறித்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் மருமகனும், காயங்களுக்கு இலக்கான பெண்ணின் கணவருமான கணேச ஐயா காந்தரூபன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. பெண்ணை கொலை செய்தமை மற்றுமொரு பெண்ணை கொலை செய்யும் நோக்குடன் வெட்டி காயமேற்படுத்தியமை உள்ளிட்ட குற்ற சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பகிர்வு பத்திரம் யாழ். மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டது. யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் நடைபெற்று நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது. (எ-01)

### தீர்மானங்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப் போக்குக் குறித்த தகவல்கள் ஊடகங்களில் வெளியாகின. இதையடுத்தே, இந்நிலைமை குறித்து ஆளுநர் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

எனவே, நியமனங்கள் வழங்கி 3 வருடங்கள் நிறைவடைந்தும் பதவி உறுதிப்படுத்தல் கடிதம் வழங்காமை, சேவை குறிப்பு, பிரமாண குறிப்பு தயாரிப்பில் தாமதம், ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் செய்யப்படாமை, உள்ளக பதவி உயர்வுகள் உரிய காலத்தில் நிறைவேற்றாமை, வருடாந்த இடைக்கால உள்ளக, மாகாண இடமாற்றக் கொள்கைகளை சரியாகக் கடைப்பிடிக்காமை, தற்போதை பதவி வெற்றிடங்களை நிரப்பாமை, உத்தியோகத்தர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளில் மேன்முறையீடுகளை உரிய காலத்தில் கவனிக்காமை,

வினைத்திறன் காண் பரீட்சைகளை உரிய காலத்தில் நடத்தாமை, அலுவலக, சிறு பணியாளர்களின் உள்ளக இடமாற்றம் வடக்கு மாகாணத்துக்கு வெளியே வழங்கப்படல் போன்ற விடயங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்து நடைமுறைப்படுத்தாது இருந்தால் அவை குறித்துத் தமக்கு ஆளுநர் செயலகத்துக்கு அறிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

### 9 பேருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்தேன். மறுநாள் நான் சிகிச்சை பெற்ற மருத்துவமனையில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. ‘கண்ணில் வலி இருக்கிறதா?” என விசாரித்தார். நான் ஓம் என்று சொன்னதும் என்னை உடனடியாக மருத்துவமனைக்கு வருமாறு அழைத்தார்கள்.

நான் அங்கு சென்றபோது என்னுடன் ஒப்ரேஷன் செய்தவர்களும் வந்திருந்தனர். அங்கு சிகிச்சை பெற்ற பின்னர் நேற்றிரவு (திங்கள் இரவு) அம்புலன்ஸில் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். சத்திர சிகிச்சையால் ஏற்பட்ட கிருமி தொற்றுக்காகவே எமக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

எமக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைக்காக 60 ஆயிரம் ரூபா தொடக்கம் 75 ஆயிரம் ரூபா வரை அந்த மருத்துவமனைக்கு செலவிட்டிருக்கிறோம்.” - என்றார்.

இந்த விடயம் குறித்து யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

தனியார் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திர சிகிச்சையில் ஏற்பட்ட கிருமி தொற்றால் பாதிக்கப்பட்ட 7 ஆண்களும் 2 பெண்களும் வைத்தியசாலையில் சேர்க்கபட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் வவுனியாவில் இருந்து சிகிச்சைக்காக வந்துள்ளார்.

அவர்களுக்கு தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட அனைவரும் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள். கிருமி தொற்று தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை நுண்உயிரியல் பிரிவு மற்றும் வைத்திய நிபுணர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளார்கள். மாதிரிகளை கொழும்புக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளார்கள். தொற்றுக்கான காரணம் பரிசோதனை முடிவிலேயே தெரிய வரும்.

தற்போது சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கு போதியளவு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இன்னும் ஓரிரு தினங்களில் அவர்கள் குணமடைந்து விடுவார்கள் -என்றார்.(உ-1)

### விமலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்தவர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்த விமல் வீரவன்ச திடீரென நெஞ்சில் கை வைத்தவாறு கீழே அமர்ந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் அபாய கட்டத்தை தாண்டி விட்டார் என தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படமாகிறது எம்.ஜி.ஆர் வாழ்க்கை

சென்னை,ஒக்.25

காமராஜ் 'தி கிங்மேக்கர்', 'முதல்வர் மகாத்மா' ஆகிய திரைப்படங்களை ரமணா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் தயாரித்து வெளியிட்டது.

எம்.ஜி.ஆர்.இன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரது வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக இந்த நிறுவனம் தயாரிக்கிறது. எம்.ஜி.ஆரின் வரலாறு அவரது பாய்ஸ் நாடகக் கம்பனி காலங்களில் ஆரம்பித்து, அவரின் திரையுலக வாழ்க்கை, அண்ணாவுடன் சந்திப்பு, அரசியல் வாழ்க்கை, பின் தமிழக முதல்வராய் உயர்ந்தது வரை படமாக்கப்படுகிறது. ஏழை எளிய மக்களின் கதாநாயகராக, மக்கள் திலகமாக விளங்கி வரும் எம்.ஜி.ஆரின் வரலாற்றுத் திரைப்படம் அவரது நூற்றாண்டு விழாவுக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமையும் என்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நவம்பர் 8ஆம் திகதி படப்பிடிப்பை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கி வைக்கிறார். விழாவில் அமைச்சர்கள், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், திரைத்துறைப் பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள். இதற்கான ஏற்பாடுகளை ரமணா கம்யூனிகேஷன்ஸ் பட நிறுவனத்தினர் செய்து வருகின்றனர்.

# பொருளாதாரத் தடை விதிக்கத் தயாராகும் அமெரிக்கா

ரோஹிங்யா,ஒக்.25

ரோஹிங்கியா முஸ்லிம்களை மியன்மார் அரசு கையாண்ட விதத்தைக் கருத்தில் கொண்டு அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா யோசித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

"மியன்மாரில் ராக்கைன் மாவட்டத்தில் ரோஹிங்கியா முஸ்லிம் சமூகத்தின் மீது நடத்தப்பட்ட வன்முறைகள் குறித்து அமெரிக்கா தனது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தது. இதன் அடுத்த கட்டமாக சிறுபான்மையினராக உள்ள ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது மியான்மர் அரசு மேற்கொண்ட வன்முறைகள் காரணமாக அமெரிக்கா அந்நாட்டின் மீது நடவடிக்கை எடுக்க ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

இதில் பொருளாதாரத் தடைகளும் இருக்கலாம்" என்று கூறப்பட்டுள்ளது. 10 லட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்கிய முஸ்லிம்கள் மியன்மாரில் 'நிறவெறி' காலக்கட்டத்தில் வாழ்வது போல் வாழ்ந்து வருகின்றனர்.ரோஹிங்கியா முஸ்லிம்களை வங்க தேசத்திலிருந்து சட்டவிரோதமாக வந்தவர்கள் என்று மியன்மார் அரசு கூறிவந்தது.

2012ஆம் ஆண்டு ராக்கைனில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே வன்முறை வெடித்தது.அதன் பிறகு அங்கு தொடர்ந்து பௌத்தர்களுக்கும், ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கும் இடையே கலவரம் நடந்து வருகிறது.கடந்த ஒகஸ்ட் மாதத்தின் இறுதியில் ஏற்பட்ட கலவரம் காரணமாக இலட்சக்கணக்கான ரோஹிங்கியா மக்கள் வங்கதேசத்துக்கு இடம்பெயர்ந்தனர். இதுவரை மியன்மாரிலிருந்து வங்கதேசத்துக்கு



5 லட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்கிய மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.



# வடகொரிய இராணுவத்தினரின் உண்மை முகம் அம்பலம்

வடகொரியா,ஒக்.25

உலக நாடுகளைத் தமது அணு ஆயுத பலத்தால் அச்சுறுத்திவரும் வடகொரியா உண்மையில் தமது இராணுவத்தைக் கட்டுக்கோப்பில் வைத்துள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது.வல்லரசு நாடுகளை தமது அணு ஆயுத பலத்தால் வடகொரியத் தலைவர் கிம் ஜோங் வுன் அச்சுறுத்தி வருகிறார்.

இதனால் அமெரிக்கா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் ஒப்புதலுடன் ஐக்கிய நாடுகள் மன்றம் வடகொரியா மீது கடும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.இந்த நிலையில் உலகின் சிறந்த இராணுவம் என வெளிக்காட்டிக்கொள்ளும் வடகொரிய இராணுவத்தினர் தொடர்பில் அதிர்ச்சிக்குள்ளாக்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

அதில், ரோந்துப்பணியில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர் சாலை ஓரத்தில் தூங்கி ஓய்வெடுப்பதாகவும் , பெண் இராணுவ வீரர் ஒருவர் குதிகால் செருப்புடன் பணியில் இருப்பதாகவும், மற்றொரு புகைப்படத்தில் 6 பேர் அமர்ந்து செல்லக் கூடிய வாகனத்தில் 14 பேர் பயணம் செய்வதாகவும் உள்ளது.மேலும் தென் கொரிய எல்லையில் பணியில் இருக்கும் இராணுவத்தினர் எதிரி நாடு என்ற உணர்வே இன்றி இருப்பதாகவும் குறித்த புகைப்படங்களை எடுத்த கலைஞர் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவில் புகைப்படம் எடுக்க கடும் கட்டுப்பாடுகள் இருக்கும் நிலையில் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டால் மட்டுமே புகைப்படங்களை வெளியே கொண்டு செல்ல முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த புகைப்படங்களை ஆய்வுக்கு உட்படுத்திய இராணுவ நிபுணர்கள், வடகொரியாவின் இராணுவத்தினரின் நிலை கவலைக்கிடம் என ஒப்புக்கொண்டாலும், குறைத்து மதிப்பிடுவது தவறு எனவும், கிம் ஜோங் வுன் இதுபோன்ற ஒரு சில இராணுவ வீரர்களை நம்பிக் கண்டிப்பாக வல்லரசு நாடுகளை அச்சுறுத்தல் விடுக்கமாட்டார் எனவும் தெரிவித்துள்ளனர்.

# சம்பளத்தை குறைத்த நயன்




இந்தியா,ஒக.24

தமிழ் சினிமாவின் பெண் சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்படும் நயன்தாரா அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக வலம் வருகிறார். தற்போது நயன்தாரா பெரும்பாலும் பெண்களுக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளையே தேர்வு செய்து நடித்து வருகிறார்.

முன்னனி நடிகையாக இருப்பதால் ஒரு படத்தில் நடிக்க 5 முதல் 6 கோடி வரை சம்பளம் வாங்கி வருவதாக கூறப்படுகிறது. ஆனால் இவர் தற்போது தனது சம்பளத்தைக் குறைத்து உள்ளார் என செய்திகள் வெளிவந்துள்ளது. இதனையடுத்து அறிவழகன் இயக்கும் படத்தில் நடிக்க நயன்தாரா தற்போது கால்ஷீட் கொடுத்துள்ளார். ஒருவரி கதை கேட்டதும் நடிப்பதற்குப் பெரிய தொகையைக் கேட்டுள்ளார்.

ஆனால் பிறகு முழுக் கதையும் கேட்ட பிறகு தன் சம்பளத்தைக் கணிசமாகக் குறைத்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.


# கார்த்திக்கு ஜோடியாகும் ப்ரியா



சின்னத்திரையில் நாடகங்களில் நடித்து பிரபலமாகியவர் பிரியா பவானி ஷங்கர். தற்போது மேயாத மான் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி இருக்கிறார்.

ரத்ன குமார் இயக்கியிருக்கும் இப்படத்தில் வைபவ் ஜோடியாக நடித்திருக்கும் ப்ரியாவுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதால் அடுத்தடுத்து படவாய்ப்புகள் வந்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் பாண்டிராஜ் இயக்கத்தில் கார்த்தி நடிக்கவிருக்கும் புதிய படத்தில் கார்த்தி ஜோடியாக நடிக்க ப்ரியா பவானி ஷங்கர் ஒப்பந்தமாகி இருப்பதாகக் கூறப்படுகிறது. 2டி என்டர்டெயின்மெண்ட் தயாரிக்கும் இந்தப் படத்தில் மற்றொரு கதாநாயகியாக அனுபமா பரமேஸ்வரன் ஒப்பந்தமாகி இருக்கிறார். பெயரிடப்படாத இந்தப் படத்துக்கு டி.இமான் இசையமைக்க இருப்பதாகவும் தகவல் வெளியாகியிருக்கிறது. இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் துவங்க இருக்கிறது.

# சாம்பாரில் பல்லி



நாகர்கோவில்,ஒக்.25

நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் அரசு வைத்தியசாலை வளாகத்தில் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தினமும் 150 பேர் சாப்பிடும் வகையில் உணவு தயாரிக்கப்படுகிறது.நேற்றுக் காலை நோயாளியுடன் தங்கியிருந்த பெண் ஒருவர் அம்மா உணவகத்துக்குச் சென்று இட்லி, சாம்பார் வாங்கிச் சாப்பிட்டார். அப்போது சாம்பாரில் பல்லி ஒன்று இறந்து கிடந்ததாகவும், அதனால் தனக்கு வாந்தி ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இதை கேட்டதும் மற்ற நோயாளிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்தத் தகவல் வைத்தியசாலை முழுவதும் பரவி நோயாளிகளிடம் பரபரப்பு ஏற்பட்டது. இதுபற்றி வைத்தியசாலை உரிமையாளர் மற்றும் உணவு பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அம்மா உணவகத்தில் மீதம் இருந்த சாம்பாரை உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வுக்காகச் சேகரித்தனர். அந்தச் சாம்பார் நெல்லையில் உள்ள ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. சாம்பாரில் பல்லி கிடந்தது உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புதிய கிரகங்களாக மாறும் வால் நட்சத்திரங்கள்

வொஷிங்டன்,ஒக்25

அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் ஹவாய் தீவில் சக்தி வாய்ந்த அதி நவீன டெலஸ் கோப்புகளை நிறுவியுள்ளது. அதன் மூலம் விண்வெளியில் உலா வரும் புதிய கிரகங்கள், கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் மற்றும் வால் நட்சத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வால் நட்சத்திரங்களின் உடைந்த நீள் வட்டவளையங்கள் ஒன்றிணைந்து புதிய கிரகங்கள் உருவாகியுள்ளதை சமீபத்தில் 'நாசா' விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். நீள்வட்ட வளையங்கள் அதிக அளவிலான கார்பன் மோனாக்சைடு வேறு மூலக் கூறுகளால் ஆனது என்று அவர்கள் கூறியுள்ளனர். இந்த புதிய



கிரகங்கள் சூரிய மண்டலத்தில் இருந்து 3 மடங்கு தொலைவில் இருப்பது நாசா நிறுவியுள்ள டெலஸ் கோப்புகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

## உதவித்திட்டம்



சுதந்திர கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் வடமாகாணசபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்துவினால் கரவெட்டி கமநலசேவைத் திணைக்களத்திற்கு உட்பட்ட பகுதி விவசாயிகளுக்கு சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரங்கள் அதற்கான பைப்புக்கள் என்பன வழங்கப்பட்டுள்ளது.

## 'பின்னணி' அரசியல்




## "ஐ.நாவுடன் இணைந்து செயற்படுவோம்"

கொழும்பு, ஒக்.25

ஐ.நா. சபைக்கு அரசாங்கம் தொடர்ந்தும் மதிப்பளித்து அதனுடன் இணைந்து செயற்படும் என வெளிவிவகார அமைச்சின் செயலர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் ஐ.நாவுக்கும் இடையிலான உறவு எப்போதையும் விட சிறப்பாக உள்ளது. இந்நிலையை தொடர்ந்தும் இலங்கை தக்க வைக்கும் - என்றும் அவர் கூறினார்.

# ஆயுதம் தோண்டும் பணி தோல்வியில் முடிந்தது



முல்லைத்தீவு, ஒக்.25

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கனை பாடசாலைக்கு முன்பாக விடுதலை புலிகளால் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் இடத்தில் ஆயுதம் இருப்பதாகத் தெரிவித்து நீதிமன்ற உத்தரவுடன் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளது .

முல்லைத்தீவு மாவட்ட நீதமன்றின் நீதிபதி எஸ்.எம்.எஸ்.சம்சுதீன் முன்னிலையில் கனரக வாகனத்தை பயன்படுத்தி விசேட அதிரடிப்படையினரும்,விமானப்படை, இராணுவம், பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நேற்று மாலை ஆரம்பமான தோண்டும் பணியில் எதுவும் கிடைக்காத நிலையில் தோண்டும் பணி தோல்வியில் முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பல்கலைக்கழகங்கள் உலக தரப்படுத்தலில் வீழ்ச்சி

கொழும்பு, ஒக்.25

உலக பல்கலைக்கழகங்களில் தரப்படுத்தலின்படி இலங்கையில் உள்ள உயர்மட்ட பல்கலைக்கழகங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டிற்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆசிய பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசைப் பட்டியலின் மூலமே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தரவரிசைப்பட்டியலின்படி கொழும்பு பல்கலைக்கழகம் 156 ஆவது இடத்தில் காணப்படுகிறது. மேலும் தரவரிசையில் பேராதனை பல்கலைக்கழகமானது 242ஆவது இடத்தில் மேலும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. இதில் அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகங்கள் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## தொடரும் போராட்டம்





அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் துண்டுப் பிரசுரங்களை யாழில் விநியோகித்தனர்.

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்றையதினம் துண்டுப் பிரசுரம் வழங்களை ஆரம்பித்துள்ளனர்.

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி
Ethiroli

021 3004848

நிபந்தனைக்குட்பட்டது

## கைதான அரசியல்வாதியிடம் துப்பாக்கி ரவைகள் மீட்பு

கொழும்பு, ஒக்.25

திவிலிப்பிட்டிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைதான ஐ.தே.கவின் மேல் மாகாண சபை உறுப்பினர் ரன்டீர் ரோத்ரிகோவின் வீட்டில் இருந்து 115 ரவைகளையும் குண்டு துளைக்காத உடையையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட ரவைகள் பல்வேறு துப்பாக்கிகளுக்கு உரியவை என்றும், இதையடுத்து மாகாண சபை உறுப்பினரின் மனைவியையும் தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திவிலிப்பிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார். இதனுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மாகாண சபை உறுப்பினர் ரோத்ரிகோ உட்பட 7 பேர் உடனடியாகக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.